சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 186/2022

**PW 1-செல்லப்பன்** **24. 07. 2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விபத்து நடந்த தேதியன்று TN 37 AE 2452 என்ற TVS Mopet வாகனத்தை ஓட்டி சென்றேன் என்று சொன்னால் சரிதான். அந்த வண்டியை ஓட்டி சென்றபோது எனக்கு ஓட்டுநர் உரிமம், காப்பீடு மற்றும் தகுதிச்சான்று இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு வாகனத்தை ஓட்டுவதற்கே எந்த தகுதியும் இல்லை என்றும் அதனால் 3 ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் தர தேவையில்லை என்று சொன்னால் சரிதான். நான் வாகனத்தை ஓட்டியபோது எனது வாகனத்தில் ஓட்டுநர் உரிமம், காப்பீடு, தகுதிசான்று ஆகியவற்றை வைத்திருந்தேன், விபத்தின் காரணமாக காணாமல் போய்விட்டது. நான் சொல்வது பொய் என்றும், அவ்வாறு தொலைந்திருந்தால் அதன் நகலை பெற்று தாக்கல் செய்திருக்கமுடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து தேதியில் ரோட்டின் மேபுறம் இருந்து கிழபுறம் செல்வதற்காக நின்று கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். விபத்தானது ரோட்டின் மேபுறம் நடந்தது என்று சொன்னால் சரிதான். காவல் துறையினர் விபத்தானது ரோட்டின் கிழபுறம் நடந்ததாக சொல்லியுள்ளனர் என்று சொன்னால் அதுபற்றி என்கு தெரியாது. நான் பொய்யான விபரங்களை கூறி மனுவை தாக்கல்ச ெய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மாதம் ரூ-50,000/- சம்பாதித்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றும் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர்

காரணம் இல்லை என்றும் அதனால் 3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி